| O.S.No. 182/2019 | DW1: திரு. ராஜி (எ) குருசாமி<br>த/பெ. திரு. நரசிம்மலு | 29-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

1. நான் அக்கப்பநாயுடுவின் நேரடி வாரிசு இல்லை. அதேபோல் அக்கப்பநாயுடுவின் மகள் சரோஜினிக்கும் நான் நேரடி வாரிசு இல்லை. சரோஜியம்மாளுக்கு நேரடிய வாரிசுகள் உள்ளார்கள். சரோஜினியம்மாள் எனது பெயரில் உயில் சாசனம் எழுதி வைத்தார் என்று வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் சரோஜினியம்மாளுக்கு நேரடி வாரிசு இல்லை என்பதால் என் பெயருக்கு சரோஜினியம்மாள் உயில் சாசனம் எழுதி வைத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. சரோஜினியம்மாள் சொத்தினை கிரையமாகத்தான் எனக்கு கொடுக்க முடியும் என்றாலும், உயிலில் எழுதி வைக்க முடியாது என்றாலும் சரியல்ல.

2. 2014–ம் வருடம் சரோஜினியம்மாள் என் பெயரில் உயில் சாசனம் எழுதி வைத்தார், தேதி, மாதம் ஞாபகமில்லை. அந்த உயில் சாசனம் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் ஆகும். அந்த உயில் சாசனம் பதிவு செய்யப்படும்போது நான் உடன் இல்லை. அந்த உயில் சாசனத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியும், சாட்சிகள் கையெழுத்து போடும்போது நான் அங்கு இல்லை. அந்த சாட்சிகளை விசாரிக்கும்பட்சத்தில் சரோஜினியம்மாள் உயில் சாசனம் எழுதி வைத்தாரா இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

3. அ.வ. எண். 43/2021 வழக்கினை உயில் சாசனத்திற்காக போடவில்லை, அகத்தேரிப்பட்டு கிராமத்தில் உள்ள பட்டா எண். 5 சொத்தினை கிரையம் வாங்கியதை வாதி தடுத்ததால் அந்த வழக்கினை

தாக்கல் செய்தேன். அந்த சொத்து அக்கப்ப நாயுடு சரோஜியம்மாள் பெயரில் ஏற்படுத்தி வைத்த உயில் சாசனப்படிதான் சரோஜியம்மாளிடமிருந்து நான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் சரோஜியம்மாளுக்கு உயில் சாசனப்படி கிடைக்கப்பெற்ற சொத்து என்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. அக்கப்ப நாயுடு 29-12-1996-ல் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் எழுதி வைக்கவில்லை. அந்த உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்களை சரோஜியம்மாள் உயில் சாசனத்தை ஏற்றுக்கொண்டு உயில் சாசனம் முன்னிலைக்கு கிடைத்த சொத்தினை விற்பனை செய்துள்ளதால் அந்த உயில் சாசனத்தை ஆட்சேபணை செய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4. இந்த வழக்கினை வாதி தாக்கல் செய்த பிறகுதான் நான் அ.வ.எண்.43/2021 வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண்.43/2021 வழக்கில் இந்த வழக்கு பற்றிய விவரங்களை சொல்லியுள்ளீர்களா என்றால் ஞாபகமில்லை. நான் இவ்வழக்கு பற்றிய விவரங்களை மறைத்து அந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண். 43/2021 வழக்கில் அக்கப்பநாயுடு எழுதி வைத்த உயில் சாசனத்தில் உள்ள சாட்சி வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கிலும் மேற்படி சாட்சியை வாதி விசாரித்துள்ளார் என்றால் சரிதான்.

5. அ.வ.எண். 43/2021 வழக்கில் வாதி உயில் சாசனத்தில் உள்ள சாட்சியை விசாரித்து நிரூபித்ததால் நான் அதனை காரணமாகக் கொண்டு அந்த வழக்கினை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால்

அவ்வாறு இல்லை. என்ன காரணத்திற்காக அந்த வழக்கினை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் பட்டா மாற்றி தருகிறேன் என்று வருவாய்த்துறையில் சொன்னதால் வாபஸ் பெற்றுக்கொண்டேன். அ.வ.எண். 43/2021 வழக்கினை பட்டா மாற்றித்தரவேண்டும் என்று பரிகாரம் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கினை என்ன காரணத்தினால் வாபஸ் பெற்றேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. அக்கப்பநாயுடு சரோஜினியம்மாள் வாரிசுகளுக்கு 3 தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் 2 பத்திரங்கள் எழுதியது பற்றி எனக்கு தெரியும். மேற்படி 3 தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. அதேபோல், சகுந்தளாஅம்மாளின் வாரிசுகள் பெயரிலும் அக்கப்பநாயுடு 4 தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெகதாம்பாள் சொத்தில் அக்கப்பநாயுடுவுக்கு 3–ல் 1 பாகம் உரிமை உள்ளதால் அந்த 3–ல் 1 பாகத்தை தன்னுடைய 2வது குமாரத்தியான சகுந்தலாஅம்மாள் தன்னுடைய காலாந்திரத்திற்கு பிறகு அடைய வேண்டும் என்று B ஷெட்யூலில் குறிப்பிட்டு உயில் சாசனத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அந்த உயில் சாசனத்தில் அவரது மூத்த குமாரத்தி சரோஜினியம்மாள் A ஷெட்யூல் சொத்தினை அவரது காலாந்திரத்திற்கு பிறகு அடைய வேண்டும் என்று எழுதியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. எனது எதிர்வழக்குரையில் அக்கப்பநாயுடு அவரது குமாரத்தியான சரோஜினியம்மாளின் வாரிசுகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்பதை பொறுத்து தெரியாது என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அக்கப்பநாயுடு எழுதி வைத்த உயில் சாசனம் ஆச்சாரத்திற்கு வந்து அதன்படிக்கு A ஷெட்யூல் சொத்தினை சரோஜினியம்மாளும், B ஷெட்யூல் சொத்தினை சகுந்தலாஅம்மாளும் அடைந்தார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சரோஜினியம்மாளிடமிருந்து ஜெகதாம்பாள் சொத்தினை கிரையம் வாங்கியுள்ளேன்.

8. சரோஜினியம்மாளுக்கு 3-ல் ஒரு பாகம் மட்டுமே உரிமை உள்ள நிலையில் நான் பாதி பாகத்தினை கிரையம் வாங்கியது சட்டப்படி செல்லாது என்றாலும், அது வாதியின் பாகத்தை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கான பட்டா சகுந்தலா அம்மாள், சகுந்தலா அம்மாள் மற்றும் வாதி செல்வராஜ் ஆகிய 3 நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது. அந்த கூட்டுப்பட்டாவில் வாதியின் பெயர் உள்ளது என்பதால் நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் எடுத்தேன். அவ்வாறு நடவடிக்கை எடுத்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன். இன்றைய தேதி வரை பட்டாவில் எனது பெயர் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஜெகதாம்பாள் சொத்தில் பாதி பாகம் எனக்கு உரிமை உள்ளது என்று சொல்லி பட்டா எனது பெயரில் மாற்றி தருமாறு கேட்டேன் என்று சொன்னால் சரிதான். ஆனால், வாதி எனக்கு 3-ல் 1 பாகம்தான் உரிமை உள்ளது என்று ஆட்சேபணை செய்தார் என்றால் அவ்வாறு இல்லை.

9. தாவாவில் கண்டுள்ள சொத்துக்களில் எனக்கு எவ்வித உரிமையோ அனுபவமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. சரோஜினியம்மாளிடம் கிரையம் வாங்கிய சொத்தினை பிரித்து தரும்படிக்கு வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் பொதுவில் என்று குறிப்பிட்டு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அதனால், என்னுடைய சொத்து என்னவென்று அடையாளப்படுத்துவதற்கு பாகப்பிரிவினை செய்தால்தான் தெரியவரும் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் நான் எவ்வித உரிமையோ பாத்தியமோ கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் வாதி அனுபவிப்பதை தடை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.29 16:04:48 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**